# வடக்கு-கிழக்கில் அமைதி நிலவினால் ராணுவ செலவு குறையும்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவச் செலவினங்கள் குறைய வேண்டுமானால் வடக்கு-கிழக்கில் அமைதி நிலவ வேண்டுமென இலங்கைக்கு உதவி வழங்கும் நாடு களின் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா 'சண்டே ஒப் சேவருக்கு' வழங்கிய பேட்டியில் கூறியுள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 14 இதழ் 133

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 28 — 06 — 1993

## அரச வர்த்தமானி புலிகளிடம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

அரசினால் தடை நீக்கம் செய்யப்பட்ட பொருட்கள் தொடர்பான அரச வர்த்தமானி பிரிகேடியர் வீரசேகராவினால் நேற்று மாலை முன் தினம் புலிகளிடம் கையளிக்கப் பட்டது.

இந்த வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹைமாரிஷல் வோல்டர் பெர்னாண்டோவினால் விடுவிக்கப்பட்டதாக யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார். (இ)

# புலிகளுடனான சந்திப்பு குறித்து பிரிகேடியர் அரசிடம் கூறுவார்

## நேற்று கொழும்பு திரும்பினார்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளுடன் நேற்றுமுன்தினம் மாலை யாழ். நகரில் நடாத்திய பேச்சுக்களின் விபரங்களை ஜனாதிபதியின் தூதர் பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா அரசிடம் விளக்கிக் கூறுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரி வைத்தியர் குழு பிரிகேடியர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரியைச் சேர்ந்த மருத்துவ தூதுக்குழு நேற்றுக்காலை பிரிகேடியர் ஆனந்த வீரசேகராவை சந்தித்து யாழ். ஆஸ்பத்திரிக்கு தேவையான மருந்து வகைகளின் விபரப்பட்டியலை கையளித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மருத்துவ குழுவில் பணிப்பாளர் செல்வி நவமலர் கனகரட்ணம், வைத்திய நிபுணர் எஸ். சிவகுமாரன், திரு கணேசலிங்கம் ஆகியோர் இடம் பெற்றிருந்தாகவும் தெரிவிக்கப்படுகிறது. (56-இ)

## உடுகம்பொல தப்பிச்செல்ல அமைச்சர் ஒருவர் உதவினார்

(கொழும்பு)

இலங்கையின் ஜனாதிபதி பிரேமதாசாவும் அவரது கட்சித் தலைவர்களும் கறுப்புப் பூனை படை மூலம் நூற்றுக்கணக்கானோரையும் தனது அரசின் எதிரிகளையும் படுகொலை செய்ததாக பகிரங்கமாக குற்றம் சாட்டிய இலங்கையின் முன்னாள் பொலிஸ் அதிகாரி உடுகம்பொல கொழும்பிலிருந்து சென்னைக்கு தப்பிச் செல்ல தற்கு பிரேமதாசாவின் அமைச்சரவையிலுள்ள ஒரு முக்கிய அமைச்சர் உதவினார்.

(-4ம் பக்கம் பார்க்க)

## உடுகம்பொலவுக்கு பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)

முன்னாள் பொலிஸ் டி. ஐ. ஜி. உடுகம்பொலவின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அரசுத் தரப்பிலிருந்தும், வெளியிலிருந்தும் உடுகம்பொலவுக்கு எதிர்ப்புகள் அதிகரித்து வருவதாலேயே இவரது பாதுகாப்பு அதிகரிக்கப் பட்டுள்ளதாம்.

ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களின் கொலைகளில்

(4-ம் பக்கம் பார்க்க)

## ருமேனிய எல்லையில் தமிழர் பலர் கைது

(லண்டன்)

ருமேனிய எல்லையில் வைத்து இலங்கைத் தமிழர் பலர், கடந்த வியாழக்கிழமை அந்நாட்டு எல்லைக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் நோக்கில் இவர்கள் ருமேனியாவுக்குள் நுழைய முயன்றபோதே கைது செய்யப்பட்டனராம்.

இதேவேளை ஜேர்மனியில் வெளிநாட்டவர்க்கு எதிராக நாஜிப் படைகள் மேற்கொண்டுவரும் தாக்குதலுக்குத் தமிழரும் இலக்காகிவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ)

## விலைவாசி உயர்வு; எதிரணிகள் அக்கறையில்லை

(கொழும்பு)

இலங்கையில் எதிர்க்கட்சிகளின் கூட்டு முன்னணி நாட்டில் விஷம் போல் உயர்ந்து கொண்டு வரும் விலைவாசி உயர்வு, இளைஞர்களின் வேலைவாய்ப்பின்மை பற்றி அக்கறை கொள்ளாது இருக்கின்றது என்று மக்கள் ஜக்

(4-ம் பக்கம் பார்க்க

## தெற்கில் தடுப்பு முகாமிலிருந்து பலரைக் காணவில்லை

(கொழும்பு)

புதிய ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவின் ஆட்சிக் காலத்தில் மனித உரிமைகள் மதிக்கப்படுகின்றது என்று கூறுகிற போதிலும் தென் இலங்கையில் தடைமுகாம்களில் வாழும் கைதிகள் விடயத்தில் அப்படியாகத் தென்படவில்லை என்று பி. பி. ஸி.

4-ம் பக்கம் பார்க்க)

## ரஞ்சனைக் கொல்ல முயன்ற ராணுவ சிப்பாய்க்கு 15 வருட சிறைத் தண்டனை

(கொழும்பு)

இலங்கையின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சரான திரு. ரஞ்சன் விஜயரத்தினவை உணவில் விஷமிட்டு கொல்ல முயற்சித்தார் என்று இலங்கை இராணுவ வீரர் ஒருவருக்கு இராணுவ நீதிமன்றம் 15 வருட சிறைத்தண்டனை விதித்துள்ளது.

1989-ம் ஆண்டு ஜே.வி.பி. போராட்டத்தின் போது இந்த அமைப்பின் அனுதாபியான டி. சில்வா எனப்படும் இந்த இராணுவ வீரர் இராணுவ இரகசியங்களை ஜே. வி. பிக்கு வழங்கினார் என்றும்,

(4-ம்பக்கம் பார்க்க)

## கிளாலி-பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி-பூநகரி படகுச் சேவை, இன்று திங்கட்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என அறிவிக்கப் படுகிறது. (இ)

## சினைப்பர் தாக்குதல் இளம் பெண் பலி

(யாழ்ப்பாணம்)

இளவாலைப் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர், நேற்றுக் காலை மேற்கொண்ட சினைப்பர் தாக்குதலில் இளம் பெண் ஒருவர் பலியானார்.

நேற்றுக் காலை இளவாலைக்குச் சென்று வீட்டுப் பொருட்களை எடுத்துக்கொண்டிருந்த இளவாலையில் இருந்து இடம் பெயர்ந்து ஆனைக்கோட்டையில் தங்கியிருந்த செல்வி கலிஸ்ரா குரூஸ் (20 வயது) என்ற இளம்பெண் மீது படையினர் சினைப்பர் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலில் இவர் பலத்த காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரும் வழியில் மரணமானார். (56-72-இ)

## ஷெல்லை பரீட்சித்த இளைஞர் உடல் சிதறிப் பலியானார்!

### மேலும் நால்வர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பழைய ஷெல்லை எடுத்து பரீட்சித்துப்பார்த்த இளைஞர் ஒருவர் உடல்சிதறிப்பலியான பரிதாபகரமான சம்பவம் ஒன்று நேற்றுமுற்பகல் 11மணியளவில் ஆனைக்கோட்டைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அத்துடன் ஐவர் படுகாயமடைந்துள்ளனர். ஒருவர் ஆபத்தான நிலையில் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பழைய ஷெல்லினை எடுத்து பரீட்சித்துப் பார்த்தவரான பண்டத்தரிப்பு சாந்தையிலிருந்து இடம்பெயர்ந்து

(4-ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### PITAWAKKA PLUS

மதுபானத்தால் ஏற்படும் ஈரல் வியாதிகளுக்கும் வேறு மருந்துகளால் உடலில் ஏற்படும் நச்சுத்தன்மைகளுக்குமாக 9 வகை மூலிகைகள் அடங்கியது. கிடைக்குமிடம்: எஸ். ரி. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (எ-112)

— பெயர் மாற்றம் —

யாழ் நகரை வசிப்பிடமாகக் கொண்ட "கணேசா" ஆகிய எனது பெயர் G.V. Kanesalinkam என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன்
G.V. Kanesalinkam,
298, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்.

(சி 252)

### விற்பனைக்கு

பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். சுரேஷா புத்தக களஞ்சியம், 25, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். (ஏ-3206)


## இன்று

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளுக்கிடையிலான விவசாய வினா விடைப் போட்டி இன்று 28ம் திகதி சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (72)

★

(யாழ்ப்பாணம்)

கைதடி இரட்சணிய சேனை இல்லத்தினரால் நடத்தப்பட்டுவந்த தையல் பயிற்சி வகுப்பு நிறைவுழா இன்று மேற்படி இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் சித்தியடைந்த மாணவிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளது.

## இராசி பலன்

28-06-1993

திங்கட்கிழமை

(தமிழுக்கு ஆனி 14)

நவமி பி. ப. 2-10 வரை, சித்திரை ந. இ. 12-10 வரை சித்தாமிர்தம் இராகுகாலம் காலை 7-25 முதல் 8-55வரை. சுபநேரம் காலை 11-55 முதல் 1-25 வரை.

மேஷம்: குடும்ப மகிழ்ச்சி, பெரியோர் பாராட்டு, புகழ்.

இடபம்: தொழில் விருத்தி, பணவரவு, இனிய சந்திப்பு.

மிதுனம்: இனசன விரோதம், பிரச்சனை, அமைதிக் குறைவு.

கடகம்: ஸ்திர வேற்றுமை, மனக்குமுறல், அலைச்சல்.

சிங்கம்: மகிழ்ச்சியான சூழ்நிலை, குடும்ப உறவு, விருந்துண்ணல்.

கன்னி: கடும்போக்கு, தொழில் இடைஞ்சல் ஏமாற்றம்.

துலாம்: சென்ற இடத்தில் வரவேற்பு, நண்பர் உதவி, தெய்வீக செலவு.

விருச்சிகம்: குடும்ப வேற்றுமை, மனச்சுமை, சகோதர வெறுப்பு.

தனுசு, இனம் புரியாத பயம், காரிய பலிதம், குடும்ப சுகம்.

மகரம்: மனைவியால் பெருமை, புதிய செய்தி, கடமையுணர்வு.

கும்பம்: சுடும் சினம், தொழில் பிணக்கு, அவமதிப்பு.

மீனம்: கடன் பளு, மன சஞ்சலம், கைப்பொருள் இழப்பு.

— ஜோஸ்யர்

## சைக்கிள் இலக்கத் தகடு

(பண்டத்தரிப்பு)

வலி தென் மேற்கு பிரதேச சபை பகுதியில் இதுவரை சைக்கிள்களுக்கு நம்பர் இலக்கத் தகடு (லைசென்ஸ்) பெறாதவர்கள் எதிர்வரும் 30ம் திகதிக்கு முன்னர் உப அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேசசபையின் செயலாளர் அறிவித்துள்ளார்.

1ம் திகதி தொடக்கம் இலக்கத் தகடு இல்லாத சைக்கிள் உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (72)

# பஸ் கட்டணம் குறைந்தது

(யாழ்ப்பாணம்)

மண்ணெண்ணெய் விலை குறைந்ததையடுத்து சில பாதைகளில் சேவையிலீடுபடும் தனியார் பஸ்கள் அவற்றின் பிரயாண கட்டணத்தை குறைத்துள்ளன.

இதே வேளையில் மண்ணெண்ணெ மேலதிகமாக வந்து அதன் விலையும் ஸ்திரமாகக் குறைந்த பின்பு பல தனியார் பஸ் சங்கங்கள் பஸ் கட்டணத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாமெனமினி பஸ் சங்க வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது. (சு)

## சீருடை கிடைக்கவில்லை

(அரியாலை)

யாழ். காப்புறுதிக் கூட்டுத்தாபன சிற்றூழியர்களுக்கு இவ்வாண்டுக்கான சீருடைத் துணி இன்னமும் வழங்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது. கடந்த ஆண்டு வந்த சீருடைகளையே அவர்கள் இப்போதும் பாவித்து வருவதாகவும் கூறப்படுகிறது. (59)

# வைத்தியசாலையில் இடநெருக்கடி

(பண்டத்தரிப்பு)

மானிப்பாயில் இயங்கிவரும் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வரும் நோயாளர்கள் தொகை மிகவும் அதிகரித்து வருகின்றன.

மானிப்பாய் திருக்குடும்ப கன்னியர் இல்லத்திலுள்ள சிறிய கட்டிடத்தில் தற்காலிகமாக செயற்பட்டுவரும் இந்த வெளிநோயாளர் பிரிவில் நோயாளர் தொகை அதிகரிப்பால் பலத்த இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது. (72)

# சைக்கிள்கள் எடுத்துவர கொழும்பில் ஏற்பாடு

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்திலுள்ள அங்கத்துவ பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக பாவனையாளர்களுக்கு விநியோகிப்பதற்காக யாழ். மாவட்ட விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் சைக்கிள்கள், சைக்கிள் ரயர், ரியூப்கள், பார்மா வகைகள், சவர்க்காரம் ஆகியவற்றை தருவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. கொழும்பு சென்றுள்ள சமாஜப் பிரதிநிதி இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. —72

# தச்சுத் தொழிலாளர்க்கு விரைவில் நிவாரணம்?

(ஆனைப்பந்தி)

யாழ். மாவட்ட தச்சுத் தொழிலாளர் சங்கம் வன்செயல்களினால் தொழிலை இழந்த தனது அங்கத்தவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என யாழ். அரசாங்க அதிபரிடம் விடுத்த கோரிக்கைக்கு அரசாங்க அதிபர் சம்மதம் தெரிவித்துள்ளதாக தெரியவருகிறது.

விரைவில் சம்பந்தப்பட்ட அங்கத்தவர்களுக்கான நிவாரணம் கட்டம் கட்டமாக வழங்கப்படவுள்ளது. இதற்கென விசேட அடையாள அட்டைகள் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் இயங்கும் சங்க இணைப்பாளர்களினூடாக விநியோகிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. —101

## சம்பேதுருவானவர் திருநாள்

(அரியாலை)

நவாலி சம்பேதுருவானவர் திருநாள் கடந்த 20-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. நாளை 29-ம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும் கூட்டுத்திருப்பலி புனிதரின் சொரூப பவனி ஆகியவற்றுடன் திருநாள் நிறைவு பெறும். (59)

## பிலிம்ரோல் தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

யாழ் மாவட்டத்தில் புகைப்படம் பிடிக்கும் பிலிம்ரோல்களுக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு வவுனியா தாண்டிக்குளம் கடைமுனையில் படையினர் சோதனையின் போது பிலிம்ரோல்களைக் கொண்டு வருவதற்கு அனுமதியளிக்கவில்லை என்றும் இதனாலேயே இங்கு இதற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதாக என்றும் இதுபற்றி அறியப்படுகின்றது. (72)





### ரேஸ்ரியின் சுற்றுப் போட்டியில் பங்குபற்றுவதற்கான நிபந்தனைகள்:

பியர், ஜாம் அல்லது கோடியல் போத்தல்களில் ஏதாவது ஐந்தைக் கொடுத்து அதற்குரிய பணத்தையும் அதற்குரிய அதிர்ஷ்டலாபச் சீட்டையும் பெற்றுக் கொள்ளவும். ஒவ்வொரு குலுக்கலும் மாதாந்த முடிவில் நடைபெறும்.

**போத்தல்கள் ஒப்படைக்க வேண்டிய இடங்கள்:**

(1) ரேஸ்லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட், 14, சீனியர் வீதி, யாழ்ப்பாணம்.
(2) அறிவகம் - சாவகச்சேரி (3) கபாஸ் பேக்கவுஸ் - நெல்லியடி
(4) சுந்தரம் அன் சன்ஸ் - சுன்னாகம் (5) சித்திவிநாயகர் நூல் நிலையம் - ஏழாலை மேற்கு. (6) சாவறிஸ் - கண்டுக்குளி (7) நீதினி Q - கன்னாகம்
(8) செ. சுரேஸ் - சோமசுந்தரப் புலவர் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய்.
(9) ஸ்கந்தா மாஸ்ரர் - சங்கரத்தைச் சந்தி, வட்டுக்கோட்டை.
(10) இ. இராசதுரை - பத்திரிகை விற்பனை நிலையம், இருபாலைச் சந்தி.

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.

(எ-3183)



### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிக்குப் பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 1993-07-28ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

**தற்காலிக போதனாசிரியர் (கணனிப்பகுதி)**

**சம்பள அளவுத்திட்டம்:**

தற்காலிக போதனாசிரியர் (கணனிப்பகுதி)- 1993-12-31-ம் திகதி வரை ரூபா 3,737-50 (நிலையானது) மாதமொன்றிற்கு 1994-01-01ல் இருந்து ரூபா 4,225/- (நிலையானது) மாதமொன்றிற்கு

(பரீட்சை பெறுபேறுகளுக்காகக் காத்திருப்போருக்கு அவர்களின் பெறுபேறுகள் வெளியிடப்படும் வரை ரூபா 3,540/- (நிலையானது) மாதச் சம்பளத்தில் வைக்கப்படுவர்)

**தகைமைகள்**

பட்டதாரி அல்லது பட்ட இறுதித் தேர்வுக்குத் தோற்றிப் பெறுபேறுகளுக்காகக் காத்திருப்பவர்.

ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 20/- நிதிக்கிளையில் செலுத்தி இப்பல்கலைக்கழக தாபனக் கிளை சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அந்தோரில் இருந்து பெறக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும். படிவங்களையும் ஏனைய விபரங்களையும் தபால் மூலம் பெற விரும்புவோர் ரூபா 20/- காசுக்கட்டளை / தபாற் கட்டளை 23x10 ச. மீற்றர் அளவுடைய சுய முகவரியிட்டு முத்திரை யொட்டப்பெற்ற கடித உறையுடன் அனுப்புதல் வேண்டும். விதிக்கப் பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களினூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1993-06-24. (ஏ-3212)

## மூன்றாவது ஆண்டில் அ. இ. மு. க. ஆட்சி

# ஆடம்பரத்தை தவிர்த்து தமிழகம் முன்னேற பாடுபட்டால் வரலாறு ஜெயலலிதா புகழ்பாடும்!

அது ஒரு இமாலய சாதனை. இந்திய வரலாற்றில் ஒரு புதிய எல்லைகள். ஒரு சகாப்தம் என்றும் ஒரு சரித்திரம் என்றும் கூடச் சொல்லலாம்.

1991-ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் ஜெயலலிதா தலைமையில் அனைத்திந்திய திராவிட முன்னேற்றக் கழகம் பெற்ற அந்த மாபெரும் வெற்றியை வியக்காதவர் இல்லை.

மக்கள் தன் பக்கம் என்னும் பெரு நம்பிக்கையை புதிய முதல்வருக்கு அந்தத் தீர்ப்புத் தந்தது. அளவுக்கு அதிகமான வாக்குகளை வழங்கிய அதே மக்கள் அவரிடமிருந்து எதிர்பார்த்ததும் அதிகம் தான் என்ற பொறுப்புணர்வையும் அந்தத் தீர்ப்பு கோடிட்டுக் காட்டியது.

அந்த எதிர்பார்ப்புகளைச் செல்வி ஜெயலலிதா தலைமையிலான அமைச்சரவை நிறைவேற்றியிருக்கிறதா என்பது தான் இன்றைய கேள்வி.

செல்வி ஜெயலலிதா ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது மக்களின் மகத்தான எதிர்பார்ப்புகளை உணர்ந்துதான் இருந்தார். உணர்ந்தவண்ணமே தொடக்கத்தில் செயல்படவும் செய்தார். பதவிக்கு வந்த சூட்டோடு தமிழகத்தில் ஆறாகப் பெருக்கெடுத்தோடிய சாராயத்திற்கும் தாய்மாரின் கண்ணீருக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் மாநில அரசுக்கு 300 கோடி ரூபா இழப்பு ஏற்படும் என்று தெரிந்தும் சாராயக் கடைகளை மூடுமாறு உத்தரவிட்டார்.

ஊழலற்ற நல்லாட்சி நடக்கும் என உறுதியளித்தார். தொழில் துறை வல்லுநர்களை கலந்தாலோசித்து தமிழகத்திற்கு புத்துயிரும், புதுமலர்ச்சியும் தர முயற்சிகளைத் துவக்கினார்.

சட்டமன்றத்தில் எதிர்க்கட்சிகள் வலிமையுடன் இல்லாத காரணத்தால், அரசின் குறையைச் சுட்டிக் காட்டும் பணியைப் பத்திரிகைகள் தான் செவ்வனே செய்யவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

மக்கள் தீர்ப்பான ஐந்தாண்டு காலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இரண்டு ஆண்டுகள் என்பது குறுகிய காலமல்ல. ஒரு அரசின் போக்கையும், அதன் பாதையையும், கொள்கையையும், சாதனைகளையும் எடைபோட்டுப் பார்ப்பதற்கு இந்தக்கால அளவு போதுமானது தான்.

எதிர்க்கட்சிகள் ஏறத்தாழ இல்லாமல் போய்விட்டன என்று சொல்லுமளவுக்குப் புதிய சட்டப்பேரவை அமைந்திருக்கும் வேளையில் பரந்த மனப்பான்மையோடும், மிகுந்த எச்சரிக்கையோடும், சகிப்புத் தன்மையோடும் முதல்வர் நடந்து கொள்வார் என்று எதிர்பார்த்தவர்களுக்குப் பெருத்த ஏமாற்றம் என்றே சொல்லலாம்.

எதிர்க்கட்சிகள் ஆளும் கட்சிக்கு எதிர்க்கட்சிகளாகச் செயல்படக்கூடாது தான். அப்படியே அவை செயல்பட்டாலும் பெருந்தன்மையோடு பொறுத்துப்போகும் பரந்த மனப்பான்மை மிகப் பெரும்பான்மை பலம் படைத்த ஆளும் கட்சிக்கு இருக்கவேண்டும்.

சுட்டிக்காட்டப்படும் குறைகளை நியாயமெனில் திருத்திக்கொண்டு நெறிப்படுத்தலாம். சாட்டப்படும் குற்றங்களை உண்மையில்லையென ஆதாரங்களுடன் நிரூபிக்கலாம்.

வேண்டுமென்றே பழி சுமத்தப்படுமானால் அவற்றைப் புறக்கணிப்பதே ஜனநாயக ரீதியில் சிறந்த நெறியாகும்.

மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை எடுத்துக்கொண்டால் அரிசிவிலை, பால்விலை, மின்சாரம் மற்றும் பேருந்து கட்டணங்களின் உயர்வால் பொது மக்களின் பாடு திண்டாட்டமாகத்தான் உள்ளது.

விலைவாசி உயர்வுக்கு மாநில அரசை மாத்திரம் குறைகூறிப் பயனில்லை. ஆனால் எம். ஜி. ஆர். தலைமையிலான முந்தைய அரசு ஏழை மக்கள் நலன் கருதி தாம் ஆட்சியிலிருந்த பத்து வருட ஆட்சிக்காலத்தில் அரிசிவிலையை ஒரே சீரான நிலையில் வைத்திருந்ததை மக்கள் ஏக்கத்துடன் நினைக்கிறார்கள்.

தொழில்துறையில் மாநிலத்தில் பெரும் புரட்சியொன்று நிகழுமென்று பரபரப்பாக பேசப்பட்டது. மின்சாரத்தில் 4,300 கோடி ரூபாவுக்கு புதிய முதலீடுகள், 7000 கோடி ரூபாவில் ஒருங்கிணைந்த மின் உற்பத்தி நிலையம், 1500 கோடி ரூபா செலவில் குடிதண்ணீர், சுகாதாரத் திட்டங்கள் எல்லாவற்றுக்கும் மேலாக 20 ஆயிரம் கோடிரூபா மொத்த முதலீட்டில் புதிய தொழில்கள் என்ற அறிவிப்புகள் அரசு தரப்பிலிருந்து வந்தன.

காவிரிநீர் பிரச்சினையும் அதனால் தோன்றிய கலவரங்களும் இந்த அரசால் நேர்ந்தவையல்ல. அதேபோல் அயோத்தியா சம்பவங்களுக்குப் பின்னும் தமிழகம் மட்டுமே நாட்டில் அமைதிப் பூங்காவாக திகழ்ந்தது என்பதை எவரும் மறக்கமுடியாது.

ஆனால் அண்மைக்காலத்தில் ரௌடிக் கும்பல்களின் அட்டகாசங்களும் தீர்க்கப்படாத கொலைக் குற்றங்களும், வழிப்பறிகளும், விடுதலைப்புலிகள் விஷயத்தில் ஜெயலலிதா அரசு தனது உறுதியான பிடியிலிருந்து தளர்ந்து விட்டதோ என்று எண்ணவைக்கும் வகையில் நடந்துள்ள சிறை உடைப்புச் சம்பவங்களும் சட்டம் ஒழுங்கு பற்றிய வேதனையான சிந்தனைகளை மக்கள் மனதில் எழுப்பியுள்ளன.

எந்த அநீதியை எதிர்த்து தமது அரசு போராடுமென்று செல்வி ஜெயலலிதா முழங்கினாரோ அதே குற்றச்சாட்டுக்கள் இன்றைய அரசுமீது சுமத்தப்படுகின்றன.

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் பற்றிய வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு இந்த அரசுக்குப் பெருமை சேர்ப்பதல்ல.

பிரமாண்டமான கட்அவுட்டுகளும், வண்ண வண்ண சுவரொட்டிகளும், வரவேற்பு வளைவுகளும் முழுப்பக்க விளம்பரங்களும், முதல்வர் வெளியூர் செல்கையில் தொடரும் வாகன ஊர்வலங்களும் ஓர் அரசின் பெயரை வரலாற்றில் பொறிப்பதில்லை.

அணைக்கட்டுகளும், கால்வாய்களும், பள்ளிக்கூடங்களும், வீதி விளக்குகளும், தொழிற்சாலைகளும் தான் இன்றும் காமராஜரின் புகழ் பாடுகின்றனவே தவிர விளம்பரங்களல்ல.

எஞ்சியிருக்கும் மூன்றாண்டு காலத்தில் மக்களின் எதிர்பார்ப்புகளை மனதில் வைத்து மாநில முன்னேற்றத்துக்கான இலக்குகளை விழியில் வைத்து ஆடம்பரம் தவிர்த்து மாற்றுக் கருத்துக்களை மதித்து செல்வி ஜெயலலிதாவின் அரசு முன்னேறுமேயானால் வரலாறு வியந்து அவர் புகழ்பாடும். இல்லையெனில் ஒருவரலாற்று தீர்ப்பை வீணடித்த சோகமே மக்கள் மனதில் தேங்கும்.

நன்றி:

அகில இந்திய வானொலி

(இ)

## ஜனதா தள்ளை கண்டித்து தமிழகத்தில் உண்ணாவிரதம்

(சென்னை)

தமிழக ஜனதாதள் கட்சி தோழர்களை அகில இந்திய ஜனதா தள் தலைமை ரத்துச் செய்துள்ளதைக் கண்டித்து இன்று தமிழகம் முழுவதும் உண்ணாவிரதம் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

தமிழகத்திலுள்ள மாவட்டத் தலைநகரங்களில் இந்த உண்ணாவிரதம் மேற்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தமிழ்நாடு ஜனதா தளக்கட்சி தலைமைப் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்துள்ள நடிகர் சிவாஜி கணேசன் தமிழகம் முழுவதும் உள்ள கட்சித் தொண்டர்களைக் கூட்டத்தைக் கூட்டி எதிர்கால நடவடிக்கைகள் குறித்துவிரைவில் முடிவுகள் எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

## தி. மு. கவிலிருந்து நாஞ்சில் நீக்கப்பட்டதை பரிசிலனை செய்ய வேண்டும்

(சென்னை)

தி. மு. கவிலிருந்து திரு. நாஞ்சில் மனோகரன் நீக்கப்பட்டதை கட்சித் தலைமை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று இக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. வை. கோபாலசாமி கேட்டுக் கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் மதுரையில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசுகையிலே இவர் இவ்வாறு கேட்டுக்கொண்டார்.

திரு. நாஞ்சில் மனோகரன் தி. மு. கவிலிருந்து நீக்கப்பட்டது அவசர முடிவு என்றும் திரு. கோபாலசாமி மேலும் கூறியுள்ளார். தி. மு. கவினர் கட்சி ஊழியர்களையே எதிரிகளாக நினைத்துச் செயல்படக் கூடாது என்றும் அவர் கூறினார். —(த)

## 100 நீரிறைக்கும் இயந்திரங்கள் கப்பலில் எடுத்துவரப்படும்

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு தேவையான விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத்திற்கு விரைவில் கொழும்பிலிருந்து 100 நீர் இறைக்கும் யந்திரங்கள் கப்பல் மூலம்கொண்டு வரப்படவுள்ளன.

யாழ். மாவட்ட விவசாய உபகரணங்கள், தெளிகருவிகள் ஆகியவற்றையும் கப்பல் மூலம் கொழும்பிலிருந்து கொண்டுவருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக சமாஜத்தின் தலைவர் திரு ச. செல்வரத்தினம் இதுபற்றி தகவல் தருகையில் தெரிவித்தார்.

அண்மையில் யாழ். மாவட்டத்திற்கு வருகை தந்த அதிமேதகு சேவைகள் நாயகம் திரு. தேவநேசன் நேசையா மேற்படி சமாஜத்திற்கு நேரடியாக விஜயம் செய்து சமாஜ நெறியாளர்களுடன் விவசாயிகளின் தேவைகள் குறித்து கலந்துரையாடியது குறிப்பிடத்தக்கது. (72-ரி)

## விவசாயிகளுக்கு கடனுதவி

(யாழ்ப்பாணம்)

யு.எஸ்.எஸ்ட் கெயர் - அறவழி விவசாய திட்டத்தின் மீளளிப்பு செய்யப்பட்ட நிதியிலிருந்து தென்மராட்சி பகுதியிலுள்ள 160 விவசாயிகளுக்கு சிறுதானிய உற்பத்தி கடனுதவி அறவழி போராட்டக்குழுவினால் வழங்கப்பட்டுள்ளது.

கைதடி, மீசாலை, மட்டுவில் வேம்பிராய், கல்வாய் ஆகிய கிராமங்களிலுள்ள விவசாயிகளுக்கே இந்த கடனுதவி வழங்கப்பட்டது. (ரி)

## கொழும்பு செல்லும் நோயாளருக்கு

(யாழ்ப்பாணம்)

கொழும்புக்கு வைத்திய சிகிச்சைக்காக தெரிவுசெய்யப்பட்ட நோயாளிகளும், அவர்களுடன் கூடச் செல்பவர்களும் இரு நாட்களுக்குத் தேவையான உணவு, தண்ணீருடன் யாழ். அரசினர் வைத்தியசாலையில் நாளை மறுதினம் 30-ம் திகதி காலை 7-00 மணிக்கு தவறாது சமுகமளிக்குமாறு வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (56)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவுக் கோட்டத்தணிகளில் பாடசாலைகளுக்கிடையில் 7-13 வயது மாணவர்களுக்கான மெய்வல்லுநர் போட்டி புங்குடுதீவு கோட்டத்தணி அதிபர் திரு க. பேரம்பலம் தலைமையில் யாழ். செட்டிதெரு மெதடிஸ்த மிஷன் வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

மேற்படி மெய்வல்லுநர் போட்டிகள் 48 இல் புங்குடுதீவு மேற்கு அமெரிக்கன் மிஷன் வித்தியாலய மாணவர்கள் 24போட்டிகளில் முதலாம் இடத்தையும் பெற்று முன்னணியில் உள்ளனர்.

## உழைப்பாளரை இழந்த பெண்கள் பற்றி ஆய்வு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் யாழ்ப்பாணம் வருகைதந்த உலகக்கெயர் நிறுவன பெண்கள் அபிவிருத்தி ஆலோசகர் செல்வி லூயின்ஸ் கோமியர் யாழ். மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளினாலும் மற்றும் காரணங்களினாலும் உழைப்பாளர்களை இழந்த பெண்களை நேரில் சந்தித்து உரையாடினார்.

மேலும் ராணுவ தாக்குதல்களினால் இடம்பெயர்ந்து அகதிமுகாம்களில் வாழும் மக்களையும், அவர்களது நிலைமைகளையும், உழைப்பாளர்களை இழந்த பெண்களின் நிலவரம் பற்றியும் அவர் ஆய்வொன்றை மேற்கொண்டிருந்தார்.

யாழ். மாவட்டத்தில் உழைப்பாளர்களை இழந்த பெண்களுக்கு உதவி புரியும் பொருட்டு செல்வி லூயிஸ் கோமியர் இந்த ஆய்வினை மேற்கொண்டதாக கூறப்படுகிறது.

ஆய்வினை முடித்துக் கொண்டு இன்று கொழும்பு திரும்பும் இவர் கெயர் நிறுவன யாழ். கிளை ஊடாக இந்த திட்டத்தினை நடைமுறைப்படுத்துவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (162-ரி)

## யாழ். மாவட்டத்திலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு கெயர் பிரதிநிதி பாராட்டு

(யாழ்ப்பாணம்)

யுத்த நெருக்கடி காலத்தில் யாழ் மாவட்டத்திலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆற்றிவரும் பணிகளை உலக கெயர் நிறுவன விவசாயத் திட்ட ஆலோசகர் செல்வி தமரா பாராட்டியுள்ளார்.

யு. எஸ். எய்ட்-கெயர் நிறுவன அனுசரணையுடன் யாழ். மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தும் விவசாயத்திட்டத்தினை பார்வையிடுவதற்காக கொழும்பிலிருந்து வருகை தந்த செல்வி தமரா இந்த திட்டத்தினை அமுல் படுத்தும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றுகையில் இப் பாராட்டைத் தெரிவித்தார்.

கெயர் நிறுவன யாழ். அலுவலகத்தின் திட்டப்பணிப்பாளர் திரு.எஸ்.கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெற்ற இச் சந்திப்பில் மேற்படி நிறுவனங்களின் ஒத்துழைப்பினால் கடந்த மூன்று வருடகாலத்தில் யாழ். மாவட்டத்தில் விவசாய உற்பத்தி அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த விவசாயத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் தமிழ் அகதிகள் புனர்வாழ்வு கழகம், மக்கள் நலன்காக்கும் பிரிவு உளர்வலய அபிவிருத்தி நிறுவனம், ஊற்று, அறவழிப் போராட்டக்குழு ஆகிய நிறுவனங்களுக்கு நேரில் சென்று களமேற்பார்வையும் அவர் மேற்கொண்டார்.

செல்வி தமரா தனது யாழ். விஜயத்தை முடித்துக் கொண்டு இன்று குமண கப்பல் மூலம் கொழும்பு திரும்புவுள்ளார். (ரி)

# அமெரிக்க ஏவுகணைகள் பல ஈராக் தலைநகரைத் தாக்கின

## 8 பொதுமக்கள் பலி

(லண்டன்)

ஈராக் தலைநகர் பாக்தாத் மீது அமெரிக்க யுத்தக்கப்பல்களிலிருந்து நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட அகோர ஏவுகணைத் தாக்குதலில் 8 ஈராக்கிய பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 10 பேர் படுகாயமடைந்தனர். கட்டிடங்கள் பலவும் சேதமடைந்தன.

அமெரிக்க முன்னாள் அதிபர் ஜோர்ஜ் புஷ் கடந்த ஏப்ரலில் குவைத்திற்கு விஜயம் மேற்கொண்ட சமயம் அவரைக் கொலை செய்ய ஈராக் சதி செய்தற்கு பதிலடியாகவே இத்தாக்குதல் ஈராக்கின் 'உளவுத்துறை தலைமையகம்' மீது மேற்கொள்ளப்பட்டதாக அமெரிக்க அதிபர் திரு. பில் கிளின்டன் தெரிவித்துள்ளார்.

மொத்தம் 23 'டொமாஹாக் குறூஸ்' ஏவுகணைகள் சரியான இலக்கு மீது அடுத்தடுத்து தாக்கியதாக அமெரிக்க தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்க முன்னாள் அதிபரை ஈராக்கினர் கொலை செய்யச் சதி முயற்சி மேற்கொண்டதாகக் கூறப்படுவது வெறும் கட்டுக்கதை என்று ஈராக் தரப்பில் கூறப்பட்ட போதிலும், அதனை ஏற்க அமெரிக்கா தயாரில்லை என அமெரிக்க அதிகாரிகள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் ஈராக் மீது அமெரிக்கா மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதல் சரியானது என சில முக்கிய நாடுகள் தெரிவித்துள்ளன. இத்தாக்குதலை ஈராக் வன்மையாகக் கண்டித்துள்ளது. (க-சி)

## பாஸ்கரலிங்கத்தின் பதவி பறிபோனதாக வதந்தி

(கொழும்பு)

நிதியமைச்சின் செயலர் திரு. பாஸ்கரலிங்கத்தின் பதவி பறிபோய் விட்டதாகவும் அவரது இடத்திற்கு மற்றொருவர் நியமிக்கப்பட்டு விட்டதாகவும் அண்மையில் கொழும்பில் வதந்தி ஒன்று பரவியது.

இதையடுத்து பல தொலைபேசி அழைப்புகள் திரு. பாஸ்கரலிங்கத்தின் வீட்டிற்கும் நிதியமைச்சிற்கும் பறந்தது. பின்னர் அதில் எதுவித உண்மையுமில்லை என தெரிய வந்ததாம்.

இதேவேளை நிதியமைச்சில் விரைவில் பல பதவி மாற்றங்கள் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (கி)

## வீரச் சாவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாகரையில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் நேற்று முன்தினம் பதுங்கி இருந்து தாக்குதல் நடத்தியதில், விடுதலைப் புலிகளின் போராளி ஒருவர் வீரச் சாவு அடைந்தார்.

வீர வேங்கை மேஜர் அல்லது கலைமகன் (தர்மலிங்கம் மோகன்-மொறக்கொட்டாஞ்சேனை) என்பவரே வீரச் சாவு அடைந்தவராவர். (க-கி)

## படை முகாம்களிலிருந்து துப்பாக்கிச் சூடு

([illegible])

வட்டக்காடு - வெற்றிலைக்கேணி இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் இரவு ஏழு மணியளவில் தொடர்ச்சியான துப்பாக்கி வேட்டுச்சத்தம் கேட்டது. அதனைத் தொடர்ந்து எறிகணைவீச்சு இடம்பெற்றது. ஆழியவளை, உடுத்துறை கிராமப்பகுதிகளில் இவ் எறிகணைகள் விழுந்து வெடித்தன. நள்ளிரவு வரை இடைக்கிடை பரா வெளிச்சம் ஏவப்பட்டதையும் காணக் கூடியதாக இருந்தது.

நேற்று முன்தினம் பகல் இரவு வேளைகளில் இயக்கச்சி ஆனையிறவு பகுதிகளில் தொடர்ச்சியான துப்பாக்கி சூட்டுச்சத்தங்கள் கேட்டன. ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட எறிகணைகள் பளை கரந்தாய் பகுதிகளில் விழுந்து வெடித்தன. (163-கி)

### ரஞ்சனைக் கொல்ல

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் விருந்தொன்றில் வைத்து ரஞ்சன் விஜேரத்னவுக்கு உணவில் விஷம் வைக்க முயற்சித்தார் என்றும் இவர் மீது குற்றம் சாட்டப்பட்ட வழக்கிலேயே இவருக்கு இத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது என்பதும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சு-கி)

### ஷெல்லில்

1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனைக்கோட்டை புதிய அதிகாரி வீட்டமைப்புத்திட்டத்தில் வசித்துவந்தவரான சிவபாதசுந்தரம் சியோமல் (18 வயது) என்பவரே பலியானவராவார்.

இச்சம்பவம்பற்றி தெரிய வருவதாவது: ஒரு கிணற்றின் முன் கிடந்த பழைய ஷெல்லினை, பலியான இளைஞர் எடுத்துவந்து குடிசைகளுக்கு அப்பாலுள்ள வளவினுள் சைக்கிள் டைனமோவில் வயரினை பொருத்தி பரீட்சித்தபோது பெரும் சத்தத்துடன் ஷெல் வெடித்தது. ஷெல் சிதறல்கள் ஏனைய குடிசைகளில் இருந்தவர்கள் மீதும் பட்டது. சில நிமிடங்களின் பின்னர் சம்பவம் நடந்த இடத்திற்கு சென்று பார்த்தபோது இறந்தவரின் உடலினை அடையாளம் காணமுடியாத நிலையில் தலை, கால், கை, வயிறு சிதறிய நிலையில் கிடந்தது. பின்னர் ஒன்றாக கூட்டி எடுத்து சடலம் உடன் தகனம்செய்யப்பட்டது.

இச்சம்பவத்தில்இதே இடத்தில் வசிப்பவர்களான மார்முத்துஉதயகுமார் (35 வயது) என்பவர்பலத்தகாயத்திற்குள்ளாகி யாழ். ஆஸ்பத்திரியில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார் மற்றும் திருமதி சிவனேஸ்வரி பவளராசா (30 வயது) செல்வி பவளராசா ரேனுகா (22 வயது) திருமதி இராஜேஸ்வரி விஜயகுமார் 30 வயது), செல்வி நந்தினி சிவபாதசுந்தரன் (10 வயது) ஆகியோர் காயமடைந்து யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். (56-72-சி)

## அயோத்தியில் ராமர் கோயிலை கட்டுக; சங்கர பீடங்கள் வற்புறுத்து

(புதுடில்லி)

அயோத்தியில் ஸ்ரீராமர் ஆலயத்தினை உடன் கட்டிமுடிப்பதற்கும், அதனை பராமரிப்பதற்கும் என அரசியல் சாசன அமைப்பு ஒன்று ஏற்படுத்த வேண்டும் என நாட்டில் உள்ள நான்கு சங்கர பீடங்களில் மூன்றின் பீடாதிபதிகளும் காஞ்சிகாமகோடி சுவாமிகளும் யோசனை தெரிவித்துள்ளனர்.

சர்நாடகவில் நேற்று நடைபெற்ற முக்கிய ஆலோசனைக் கூட்டத்திலேயே மேற்கண்ட ஆலோசனையை அவர்கள் தெரிவித்தனர்.

மேற்படி ஆலயத்தை கட்டுவதற்காக அரசு தம்வசம் வைத்திருக்கும் நிலப்பகுதியை மீண்டும் இவ்வமைப்பிடம் ஒப்படைக்கவேண்டும் என்றும் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டுள்ளார். (க-சி)

### வடக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறுகையில்: இப்பிரச்சினையைத் தீர்க்க அரசு சகல வழிகளிலும் முயற்சி செய்து வருகிறது. அதற்கான பல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இலங்கைக்கு எவ்வளவு கிடைக்கும் என்பது முதலில் சந்தேகமாக இருந்தது. அபிவிருத்தி திட்டத்திற்கு தேவையான உதவிகளைப் பெற்றுக் கொள்வதில் ஏனைய நாடுகளோடு போட்டியிடும் நிலை ஏற்பட்டது.

தீவிரவாதப் பிரச்சினையை எதிர்நோக்கும் எந்தவொரு நாட்டிலும் இருக்கக்கூடிய சில அம்சங்கள் இலங்கையிலும் இருப்பதை உதவி வழங்கும் நாடுகள் புரிந்துகொண்டதாகவும் கூறினார். (கி)

## புதிய சட்டங்களால் ஐரோப்பிய நாடுகளிலிருந்து தமிழர் வெளியேற்றப்படலாம்

(லண்டன்)

ஐரோப்பிய நாடுகளில் அகதிகளை கட்டுப்படுத்துவதற்கான புதிய சட்ட மூலங்கள் அமுல்படுத்தப்படும் பட்சத்தில் இலங்கைத் தமிழர் பெருமளவினர் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படும்நிலை ஏற்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது வெளிநாட்டு அகதிகளை கட்டுப்படுத்துவது தொடர்பாக பல ஐரோப்பிய நாடுகள் கூட்டாக பல சட்ட மூலங்களை அமுல்படுத்தும் நோக்கில் பரிசீலித்து வருகின்றன.

ஐரோப்பிய நாடுகளில் வெளிநாட்டு அகதிகளுக்கு எதிரான பிரச்சினைகள் அந்நாடுகளின் அரசுகளுக்கு பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்தும் பிரச்சினைகளாக மாறிவருவதால் அகதிகளை தமது நாடுகளுக்குள் வருவதை தடுக்க அவை தீவிரமாக செயற்பட்டு வருகின்றன. (கி)

## சீனாவில் 50 பேருக்கு மரண தண்டனை

(பீக்கிங்)

சீனாவில் போதைப் பொருட்களின் விற்பனையில் ஈடுபட்ட 50 பேருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

போதைவஸ்து உற்பத்தி செய்யப்படும் பகுதியின் தங்க முக்கோணப்பகுதியில் 28 பேருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

சர்வதேச போதை வஸ்து எதிர்ப்பு தினத்தையொட்டி இந்த மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாம். (சி)

## எரிபொருள் முகவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள உத்தரவு பெற்ற எரிபொருள் விற்பனை முகவர்கள் அனைவரையும் இன்று திங்கள் மாலை செயலகத்தில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (சி)

## தமிழர் இருவர் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாகரைப் பகுதியில் நேற்று முன்தினம் பாரிய தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்ட ஸ்ரீலங்கா படையினர் இரு தமிழரை சுட்டுக்கொன்றதுடன் 20இற்கும் மேற்பட்டோரை கைதுசெய்து முகாம்கொண்டு சென்றுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இச்சம்பவத்தில் சபாபதி யோகேந்திரன் (20 வயது) தொண்டர் ஆசிரியரான கதிர்காமத்தம்பி குருகுலசிங்கம் (வயது22) என்பவர்களே படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டவர்களாவர். (க-கி)

### புலிகளுடனான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினம் காலை யாழ். வந்திருந்த பிரிகேடியர் ஆனந்த வீரசேகரா நேற்று மாலை 4-30 மணிக்கு கொழும்பு திரும்பினார். இவருடன் யாழ் அரச அதிபரும் கொழும்பு திரும்பினார்.

நேற்றுக்காலை திரு. வீரசேகராவிடம் யாழ். மாவட்டத்திற்கு தேவையான அத்தியாவசியப் பொருட்கள் தொடர்பாக திரட்டப்பட்ட விபரங்கள் அடங்கிய அறிக்கை கையளிக்கப்பட்டது இந்த அறிக்கையை பிரிகேடியர் கொழும்பு திரும்பியதும் அரசாங்கத்திடம் கையளிக்கவுள்ளார்.

யாழ். நகரிலிருந்து விடுதலைப்புலிகளின் பாதுகாப்புடன்நேற்றுமாலை 4-00மணிக்கு அழைத்து செல்லப்பட்ட இவர்களுடன் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பிலிருக்கும் யுத்தக் கைதி ஒருவரின் உறவினரும் செல்வதைக் காண முடிந்தது.

பருத்தித்துறையிலிருந்து பொருட்களை இறக்கிய 'குமண' கப்பலில் இவர்கள் அனைவரும் காங்கேசன்துறையை நோக்கிப் புறப்பட்டனர். (160-கி)

### உடுகம்பொல

(1ம் பக்கத் தொடர்ச்சி)

றென்று உடுகம்பொல கூறியுள்ளார்.

இவரைக் கைது செய்ய ஜனாதிபதி பிரேமதாச போட்ட உத்தரவை முன்கூட்டியே அந்த அமைச்சர் தமக்கு தெரியப்படுத்தியதால்தான் தான் லவயாக தோணியில் ஏறி சென்னைக்குத் தப்பிச் செல்ல முடிந்ததாம்.

தனக்கு உதவிய அமைச்சர் யார் என்று உடுகம்பொல இதுவரை எந்தத் தகவலும் வெளியிடவில்லை.

இந்தியாவில் இருந்தபோது விக்டர் பெரேரா என்று தனது பெயரை மாற்றிக் கொண்டு, தான் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர் என்று கூறிக்கொண்டு தலைமறைவாக வாழ்ந்துவந்ததாகவும், புதுடில்லிக்குச் சென்றவுடன் யூசுப் லத்தீவ் என்று பெயரை மாற்றிவாழ்ந்ததாகவும் உடுகம்பொல கூறினார். (சு-கி)

### உடுகம்பொலவுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உடுகம்பொலவுக்கு தொடர்பு இருப்பதாகப் பல அமைப்புக்கள் கூறியுள்ளன. (கி)

### தெற்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகிப்பதாக தெரிவித்துள்ளது.

பலாலி தடைமுகாம்களில் நான்கு பேரும் பூஸாமுகாமில் சிலரும் முகாம்களை விட்டு எங்கேயோ கொண்டு செல்லப்பட்டுள்ளனர் இவர்கள் மீண்டும் முகாமுக்கு வரவில்லை அவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாதுள்ளது என்று இரண்டு தடைமுகாம்களிலுமுள்ள கைதிகள் பி.பி.சி. சந்தேசியாவுக்கு கடித மூலம் தெரிவித்துள்ளனர் (சு-கி)

### விலைவாசி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தன கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது: மக்களுக்கு இன்று வேண்டியது நல்ல திட்டங்களாகும். இவ்வளவு காலமும் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு எனக் கூறி, எதிர்க்கட்சிகள் காலத்தைக்கடத்திவந்தனவே ஒழிய, நாடு எதிர்நோக்கி உள்ள விலைவாசி உயர்வுகள், இளைஞர் வேலையாய்ப்பின்மை பற்றி அக்கறைப்படுவதாக இல்லை.

அவ்வப்போது ஊர்வலங்களை நடத்தி, இவற்றுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கடந்த காலத்தில் போராட்டங்கள் நடத்தியதில் பயனில்லை'' என்றார். (சு-கி)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993ம் ஆண்டு யூன் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the Genneral Post office, Sri Lanke under Licence Number B/10336/B